2013 மே 3]

மக்களோடு இருக்கின்றவர்கள். மக்களோடு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிச்சயமாக மரியாதை இருக்கும். மக்களைச் சந்திக்காத சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிச்சயமாக மக்களிடத்திலே செல்வாக்கு இருக்காது. அதனால், உங்களுக்கு நிச்சயமாக மரியாதை இருக்கும். அதுவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் வழக்கறிஞர். மக்கள் உங்களிடத்தில் வருவதால் நீங்கள் மக்களிடத்தில் செல்கிறீர்கள். அதனால், அந்தச் செல்வாக்கோடு நீங்கள் யாருக்குப் பரிந்துரை செய்கின்றீர்களோ அவர்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழே இருந்தால், அது கிராம சபையில் வைக்கப்பட்டு, கிராம சபையின்வாயிலாக நிச்சயமாக அந்தப் பயனாளிகளுக்கு பசுமை வீடுகள் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 382, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

382—

தொழிற்பேட்டை

***3740—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி தொகுதியில் அரசு தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் தொழில் முனைவோர்கள் முன்வருகின்றபோது, கள்ளக்குறிச்சி தொகுதியில் சிட்கோ நிறுவனத்தின்மூலமாக தொழிற்பேட்டை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரம் கூப்ப மனம் பொங்கும், கார் இருளில் ஒளி தந்து, விண்ணோர் போற்றும் எங்கள் தாயே, உங்கள் புகழ் சொல்ல வாய் மணக்கும், வாழ்த்தைக் கேட்போர் செவி மணக்கும், வணங்கிப் பணிவோர் உயிர் உய்யும், எல்லா வாழ்வும் வளம் ஓங்கும் எங்கள் இலட்சியத் தாயே, சட்டசபை கண்ட சரித்திர தாயே, உங்கள் எண்ணமெல்லாம் ஏழையின் நினைவே, கல்லார், கற்றார் கனிவுடன் வாழ எல்லையில்லா திட்டம் வகுத்து, காலம் முழுவதும் வாழ்ந்திடவே கலங்கரை விளக்கமானீர்கள் எங்கள் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா உங்கள் பாதம் பணிந்து போற்றி அடியேனுக்கு வரம் கொடுத்த தாயே, எண்ணம் எல்லாம் நிறைவோடு பணிந்து வணங்குகிறேன்.*

எங்களது கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட பகுதி தொழில் வளர்ச்சியைக் காணாத பகுதி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். தியாகதுருகம்–அடரி சாலையில் உள்ள மகரூர் கிராமத்தில் 30 ஏக்கருக்குமேல் தரிசு நிலம் உள்ளது. அதோடுமட்டுமல்லாமல், கள்ளக்குறிச்சி ஒன்றியம், வீரசோழபுரம் மேற்குப் பகுதியில் சுமார் 20 ஏக்கருக்கு அரசு நிலம் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று, ஆணையைப் பெற்று அங்கே தொழிற்பேட்டை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை வட்டத்தைச் சேர்ந்த ஆசனூர் கிராமத்தில் 107.28 ஏக்கர் நிலப்பரப்பில் ஆசனூர் தொழிற்பேட்டை இருக்கிறது. இந்தப் பகுதி*

2013 மே 3]

கள்ளக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடத்திலே இருந்து 27 கி.மீ. தொலைவில் உள்ளது. மேலும், சாத்தனூர் கிராமத்தில் 219.52 ஏக்கர், தரிசு நிலம் தொழிற்பேட்டை அமைப்பதற்காகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதி கள்ளக்குறிச்சி பக்கத்திலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்தத் தொழிற்பேட்டைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். மேலும், சங்கராபுரம் வட்டத்திலேகூட, காட்டுவண்ணஞ்சூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். 13 கி.மீ. தொலைவில்தான் அந்தத் தொழிற்பேட்டை அமைய இருக்கிறது. மேலும், இவை எல்லாம் போதாது என்று உறுப்பினர் அவர்கள் எண்ணினால்கூட, கள்ளக்குறிச்சி தொகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தேவையான அரசு நிலம் இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற காரணத்தால் இதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு இதை எடுத்துச்சென்று, கள்ளக்குறிச்சி தொகுதியில் சிட்கோமூலமாக தொழிற்பேட்டை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 383, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.